WEB COPY



IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

DATED : 10.02.2025

CORAM

THE HONOURABLE MR.JUSTICE **M.SUNDAR**
and
THE HONOURABLE MRS.JUSTICE **K.GOVINDARAJAN THILAKAVADI**

**W.P.Nos.21009 of 2024 and 4358 of 2025**

**W.P.No.21009 of 2024**

1.R.Rajamanickam
2.R.Suresh ... Petitioners

Vs.

1.The District Collector,
Office of District Collector,
Tiruchengode Road,
Namakkal District – 637 003.

2.The Tahsildar,
Office of Tahsildar,
Rasipuram Taluk,
Rasipuram,
Namakkal District – 637 408.

3.Arul
4.Subramaniam ... Respondents



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**W.P.No.4358 of 2025**

Periyasamy ... Petitioner

Vs.

1.The District Collector,
Namakkal District,
Namakkal.

2.The Revenue Divisional Officer,
Namakkal.

3.The Thasildar,
Rasipuram Taluk,
Namakkal District.

4.The Block Development Officer
(Village Panchayat),
Block Development Office,
Vennandur, Namakkal District.

5.Suresh ... Respondents

**Prayer in W.P.No.21009 of 2024:** Writ Petition filed under Article 226 of The Constitution of India praying to issue a Writ of Mandamus to direct respondents 1 and 2 to remove the encroachments made by the respondents 3 and 4 in the public road comprised in S.Nos.353/7 and 353/6 situate in Akkaraipatti Village, Rasipuram Taluk, Namakkal District respectively by considering the petitioners' representation dated 04.06.2024 within the time frame as may be fixed by this Court.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**Prayer in W.P.No.4358 of 2025:** Writ Petition filed under Article 226 of The Constitution of India praying to issue a Writ of Mandamus to direct respondents 1 to 3 to remove the obstruction putforth by the fifth respondent in water canal (Rajavaikkal) comprised in S.Nos.236/7, 236/8 and 236/9 situated at Akkaraipatti Village, Rasipuram Taluk, Namakkal District.

| | | |
|---|---|---|
| For Petitioners | : | Mr.R.Vivek<br>in W.P.No.21009 of 2024<br><br>Mr.E.Aneesh Vinayak<br>in W.P.No.4358 of 2025 |
| For Respondents | : | Mr.T.K.Saravanan,<br>Government Advocate<br>for R1 and R2<br>in W.P.No.21009 of 2024<br>for R1 to R4<br>in W.P.No.4358 of 2025 |

**COMMON ORDER**

[Order of the Court was made by **M.SUNDAR, J.**,]

This common order will now govern captioned two main 'Writ Petitions' (hereinafter 'WPs' in plural and 'WP' in singular for the sake of brevity).



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



2. Subject matter of captioned WPs is 'lands comprised in Survey Nos.353/6, 353/7, 236/7, 236/8 and 236/9 situate in Akkaraipatti Village, Rasipuram Taluk, Namakkal District' (hereinafter 'said lands' for the sake of convenience and clarity).

3. 'W.P.No.21009 of 2024' shall be referred to as 'I WP' and 'W.P.No.4358 of 2025' shall be referred to as 'II WP'.

4. I WP has been filed by Mr.R.Rajamanickam, son of Mr.Ramasamy and Mr.R.Suresh, son of Mr.Rangasamy with a mandamus prayer for removal of alleged encroachment in public road.

5. II WP has been filed by one Mr.Periyasamy, son of Mr.Muthukavundar with a prayer for removal of alleged encroachment in Survey Nos.236/7, 236/8 and 236/9 situated at Akkaraipatti Village, Rasipuram Taluk, Namakkal District.

6. Today, Mr.R.Vivek, learned counsel on record for writ petitioners in I WP, Mr.E.Aneesh Vinayak, learned counsel on record for



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



writ petitioner in II WP and Mr.T.K.Saravanan, learned Government Advocate for official respondents in both WPs are before us.

7. As regards private respondents (R3 and R4 in I WP and R5 in II WP), we make it clear that all the rights and contentions of all three private respondents are preserved and therefore, there is no impediment in the main WPs being taken up in the Admission Board. In this view of the matter, with the consent of learned counsel for writ petitioners as well as learned State counsel, main WPs are taken up. It is brought to our notice that R2 in I WP and R3 in II WP (jurisdictional Tahsildar - Tahsildar, Rasipuram Taluk) has made a proceedings dated 31.01.2025 bearing reference Na.Ka.No.3436/2024/B5 regarding said lands and a scanned reproduction of the same as placed before us is as follows:



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**இராசிபுரம் வட்ட நிருவாக நடுவர் மற்றும் வட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள்**

ந.க.3436/2024/பி5 நாள்: 31.01.2025

பொருள்: ஆக்கிரமிப்பு - நாமக்கல் மாவட்டம் - இராசிபுரம் வட்டம்-அக்கரைப்பட்டி கிராமம புல எண் 212 - 7.97.0 ஹெக்டேர்ஸ் - சின்னஏரியில் இருந்து வெளிறேம் நீர்வழிப்பாதை ஆக்கிரமிப்பு மற்றும் மயான பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்ற உத்தரவிடுதல் தொடர்பாக.

பார்வை:
1. நாமக்கல் மாவட்டம் - இராசிபுரம் வட்டம் - அக்கரைப்பட்டி கிராமம், திரு.இரத்தினபூபதிமற்றும் சின்னஏரிபாசனவிவசாயிகள் மக்கள் குறைதீர்க்கும் நாள் மனு மற்றும் சின்னஏரிவாய்க்கால் தொடர்பான பல்வேறு மனுக்கள்
2. இராசிபுரம் வட்டாட்சியரின் அறிக்கை சி.ப.44/2023/பி3 நாள் 15.12.2023
3. நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் ந.க.328/2024/அ2 நாள் 30.01.2024
4. வெண்ணந்தூர் வட்டார வளர்ச்சிஅலுவலரின் கூடுத குறிப்பாணை ந.க. 691/2023/அ3 நாள் 23.02.2024 (ஆக்கிரமிப்பாளருக்கு அனுப்பப்பட்டது)
5. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்குஎண் W.P.No 8262/2024 தீர்ப்புரை நாள் 27.03.2024
6. திரு.ஆர்.சுரேஷ் த/பெரங்கசாமி, அடிக்கரை, தொட்டியப்பட்டி என்பவரின் ஆட்சேபனை மனு நாள் 19.02.2024
7. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.P. No.21009/2024
8. இராசிபும் வட்டாட்சியர் அலுவலகந.க. 3436/2024/பி5 நாள் 12.12.2024
9. இராசிபும் வட்டாட்சியர் அலுவலகஅழைப்பாணை ந.க.3436/2024/பி5 நாள் : 18.01.2025.

..............

உத்தரவு :

நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் வட்டம்,அக்கரைப்பட்டி கிராமம், புல எண் 212 விஸ். 7.97.0 ஹெக்டேர்ஸ் - சின்னஏரியில் இருந்து வெளியேறும் நீர்வழிப்பாதை ஆக்கிரமிப்பு அகற்றக் கோரியும் மற்றும் தொட்டியப்பட்டி ஊர்பகுதியில் இருந்து நச்சான்காடு மற்றும் அடிக்கரை வரை செல்லும் மயான வண்டிப்பாதை ஆக்கிரமிப்பு அகற்றக் கோரியும் வரப்பெற்ற மனுக்கள் தொடர்பாக விசாரணை செய்து கீழ்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

1. நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் வட்டம்,அக்கரைப்பட்டி கிராமம் சின்னஏரி வாய்க்கால் மற்றும் வண்டிப்பாதை விவரம்

அக்கரைப்பட்டி கிராம புல எண் 212 விஸ். 7.97.0 ஹெக்டேர்ஸ் புலமானது சின்னஏரி என கிராமகணக்கில் உள்ளது. மேற்படி ஏரியானது ஊரகவளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மேற்படி ஏரியிலிருந்து வெளியேறும் நீரானது சர்வேஎண் 213/7, 213/6 மற்றும் 213/8 ஆகிய புலத்தின் வழியாக பாய்ந்து சர்வேஎண் 236/9 இன் வழியே நுழைந்து சர்வே எண் 359/2A புலத்தின் வழியாக வாய்க்கால் வழித்தடத்தில் சின்னஏரி நீரானது பாசனத்திற்கு செல்வதாக கிராம வரைபடத்தில் வாய்க்கால் விளக்கி குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் பூஸ்திதியில் சர்வே எண் 213/7, 213/6 மற்றும் 213/8 ஆகிய புலத்தின் வழியாக பாய்ந்து சர்வே எண் 236/9 ,236/7 புலத்தின் வழியே நுழைந்து சர்வே எண் 359/2A புலத்தின் வழியாக வாய்க்கால் வழித்தடத்தில் சின்னஏரி நீரானது பாசனத்திற்கு செல்வதாக தெரியவருகிறது. மேற்கண்ட புல எண்கள் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு கிராமகணக்குகளில் உள்ளது.

| வ.எண் | புலஎண் | விஸ்தீரணம் (ஏர்ஸ்) | பட்டாஎண் | பட்டாதாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 213/7(நன்செய்) | 0.01.5 | 1041 | கந்தசாமி மனைவி தேன்மொழி மற்றும் 3 நபர்கள் |
| 2 | 213/6(நன்செய்) | 0.37.0 | 260 | சந்தசாமி மனைவி தேன்மொழி |
| 3 | 213/8(நன்செய்) | 0.31.5 | 1473 | கந்தசாமி மனைவி தேன்மொழி |
| 4 | 236/9(நன்செய்) | 0.07.5 | 344 | நல்லையகவுண்டர் மகன் ரங்கசாமி |
| 5 | 236/7(நன்செய்) | 0.10.0 | 344 | நல்லையகவுண்டர் மகன் ரங்கசாமி |

இதனை அடுத்து 359/1A,359/1B, 359/1D இல் உள்ளஅரசு நிலங்களின் வழியாக தொடர்ச்சியாக சென்று ஆத்துமேடு அணைப்பாலம் வரை செல்கிறது.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



மேலும் இதே அக்கரைப்பட்டி கிராமம், தொட்டியபட்டி பகுதியைச் சேர்ந்த திரு. ரவிச்சந்திரன் வகையறாவினர் வண்டிப்பாதை ஆக்கிரமிப்பு உள்ளதாக குறிப்பிட்ட பாதை விவரம்

அக்கரைப்பட்டி கிராமம் ,தொட்டியபட்டி ஊர் பகுதியில் இருந்து மேற்படி கிராமம் நத்தம் புல எண்கள் 335/19 மற்றும் 332/34 இல் இருந்து புல எண்கள் 342,348,354/1F ,353/2,353/3 ஆகிய புல எண்கள் வழியாக வந்து 353/7 இல் தென்பகுதியில் கிழமேலாக வண்டிப்பாதை வந்து 353/8,352/10 ,352/12 ,352/18B , 352/18C , 18D, 18H, 18I, 18K ,18L வரை கிழமேலாக வந்து பின் வடக்கே திரும்பி 18P யில் தென்வடலாக வந்து பின் கிழக்கே திரும்பி 18 O வில் கிழமேலாகவும் மற்றும் புல எண் 349,351 ,341 ஆகிய புல எண்களின் வடபுறமாக கிழமேலாகவும் தச்சன்காடு பிள்ளையார் கோவில் வரை பூஸ்திதியில் வண்டிப்பாதை செல்கிறது. மேற்கண்ட பாதையானது ஊரக வளர்ச்சித் துறையின் Road Register இல் Road code 212 இல் பதிவாகியுள்ளது. மேற்படி வண்டிப்பாதையில் (R 212) பாலம்,பைப்லைன்,தெருவிளக்குகள் மற்றும் வண்டிப்பாதையின் தென்புறம் தடுப்பு சுவர் ஊராட்சி ஒன்றியத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி கிராமம் நத்தம் புல எண்கள் 335/19 மற்றும் 332/34 இல் இருந்து புல எண்கள் 342,348,354/1F ,353/2,353/3 ஆகிய புல எண்கள் வழியாக வந்து 353/7 இல் தென்பகுதியில் கிழமேலாக வண்டிப்பாதை வந்து மேற்படி புலஎண் 353/7 இன் கிழபுறமாக வடக்கு நோக்கி வண்டிப்பாதை சென்று பின் கிழக்கே திரும்பி ச.எண்.353/6ன் தென்புறமாக கிழமேலாக சென்று பின் வடக்கே திரும்பி 353/6-ன் கிழபுறமாக தென்வடலாக சென்று ச.எண்:359/18 வழியாக அடிக்கரை வரை செல்கிறது. மேற்கண்ட பாதையானது ஊரக வளர்ச்சித் துறையின் Road Register இல் Road code 214 இல் பதிவாகியுள்ளது. மேலும் புல எண்:354/1F,2,3,353/7,6 ல் வண்டிப்பாதை விளக்கி காட்டப்பட்டுள்ளது.

மேற்கண்ட புல எண்கள் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு கிராமகணக்குகளில் உள்ளது.



https://www.mhc.tn.gov.in/judis

| வ.எண் | புல எண் | விஸ்தீரணம் (ஏர்ஸ்) | பட்டா எண் | பட்டாதாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 342 | 0.28.0 | - | அரசு புறம்போக்கு — வண்டிப்பாதை |
| 2 | 348 | 0.83.0 | - | அரசு புறம்போக்கு — வண்டிப்பாதை |
| 3 | 354/1E | 0.61.0 | 296 | நல்லம்மாள்-1, தாமரைச்செல்வன்-2 |
| 4 | 354/2 | 0.47.0 | 1302ஐ | தர்மலிங்கம் |
| 5 | 354/3 | 0.33.0 | 1302 | தர்மலிங்கம் |
| 6 | 353/7 | 0.44.0 | 1605 | அருள் |
| 7 | 353/8 | 0.34.0 | 1355 | திலகவதி |
| 8 | 353/6 | 0.61.0 | 184 | சுப்ரமணி |
| 9 | 359/1B | 1.44.5 | - | அரசு புறம்போக்கு |
| 10 | 352/10 | 0.20.0 | 1365 | திலகவதி |
| 11 | 352/12 | 0.13.0 | 27 | பெரியசாமி |
| 12 | 352/18B | 0.22.0 | 27 | பெரியசாமி |
| 13 | 352/18C | 0.03.0 | 29 | அந்தியப்ப கவுண்டர் |
| 14 | 352/18D | 0.04.5 | 1221 | தனலட்சுமி |
| 15 | 352/18H | 0.02.5 | 241 | தாயம்மாள் |
| 16 | 352/18I | 0.02.0 | 29 | அந்தியப்ப கவுண்டர் |
| 17 | 352/18K | 0.01.5 | 724 | இராமசாமிகவுண்டர்-1 சின்னு கவுண்டர்-2 |



https://www.mhc.tn.gov.in/judis

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | 352/18L. | 0.05.0 | 1359 | சத்தியமூர்த்தி |

கூட்டுத் தலத்தணிக்கை குறிப்பு

மேற்படி மனுக்களின் பேரில் காவல் துறை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர், வருவாய் ஆய்வாளர், வருவாய் ஆய்வாளர், நில அளவர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோருடன் தலத்தணிக்கை மேற்கொண்டதில் புல எண்கள் 213/7, 213/6, 213/8, 235/9 மற்றும் 235/7 ஆகிய புலங்களில் பூஸ்திதியில் வாய்க்கால் உள்ளதும் , இதில் தென்னை மட்டைகளை போட்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளதும், மேலும் நாணல் புல் பூண்டு முளைத்து வாய்க்கால் தூர்ந்துள்ளதும் தெரியவருகிறது. இவ்வாய்க்கால் கரைகள் ஏற்கனவே ஊரகவளர்ச்சித்துறையின் மூலம் கல்லுகட்டுகள் அமைக்கப்பட்டுள்ளதும் மேற்படி சின்னஏரியில் உள்ள நீரினை பயன்படுத்தி நீண்டகாலமாக மேற்படி வாய்க்கால் அருகில் உள்ள பட்டாதாரர்கள் விவசாயம் செய்து வருகின்றனர் என்பதும் தெரிய வருகிறது. மேற்படி வாய்க்காலானது இப்பகுதி விவசாயத்திற்கு ஆதாரமாக உள்ளது. எனினும் தற்போதைய நீர்வழிப் பாதையானது UDR க்கு பின்னிட்ட கிராமகணக்குகளில் உள்ளது போலல்லாமல் சிறிது வடபுறம் விலகி மேலே குறிப்பிட்டுள்ளவாறு புல எண்களின் வழியே தனது வழித்தடத்தை மாற்றி செல்கிறது.

மேலும் மேற்கண்ட வண்டிப் பாதையை பொதுமக்கள் பாதையாக பயன்படுத்தி வந்ததும் தற்போது 353/7,353/6, 353/8,352/10 352/12 மற்றும் 352/18B ஆகிய புல எண்களில் பாதையின் குறுக்கே கற்களை கொட்டியும் மரங்களை வைத்தும் , குழி வெட்டியும் பாதைகளை சிறுத்தும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது.

அதுபோல புலஎண் 353/7 இன் வழியாக செல்லும் வண்டிப்பாதையானது UDR க்கு பின்னிட்ட கிராமகணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்படி புல எண்களின் குறுக்கே மூலைவிட்டமாக உள்ளது போல் அல்லாமல் மேற்படி புலஎண்களின் தென்புறமாக கிழமேலாகவும், கிழபுறம் தென்வடலாக பாதை செல்கிறது. மேலும் புல எண்கள் 353/8,352/10



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



,352/12 ,352/18B , 352/18C , 18D, 18H, 18I, 18K ஆகியவற்றில் வண்டிப்பாதை விளக்கி குறிப்பிடப்படவில்லை. எனினும் கால்பாதை விளக்கி காட்டப்பட்டுள்ளது. ஆனால் பூஸ்திதியில் வண்டிப்பாதை காலம்காலமாக சென்று வருவது தெரிய வருகிறது. இதற்கு முன்னும் பின்னும் தொடர்ச்சியாக தெளிவான வண்டிப்பாதை செல்கிறது.

மேற்படி நீர்வழிப்பாதை ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலத்தின் உரிமையாளர் இவ்வாய்க்காலின் குறுக்கே மட்டைகளைப் போட்டு கடைமடைக்குத் தண்ணீர் செல்லாதவகையில் தடை செய்துள்ளதை அகற்றித் தரக் கோரி பார்வை 1-இல் வரப்பெற்ற மனுக்கள் மீது பார்வை -2 இல் அறிக்கை அனுப்பப்பட்டதன் படி பார்வை -3 இன் படி நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் வெண்ணந்தூர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வுத்தரவின் படிபார்வை -4 இல் கண்டவாறு வெண்ணந்தூர் வட்டார வளர்ச்சி அலுவலரால் மேற்படி ஆக்கிரமிப்புகளை ஆக்கிரமிப்புதாரர் தாமாகவே அகற்றிக் கொள்ளும் பொருட்டு அறிவிப்பு வழங்கியுள்ளார். இதனை எதிர்த்து இவ்வறிவிப்பினை பெற்றுக் கொண்டு நில உரிமையாளர் திரு .சுரேஷ் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் W.P.No 8262/2024 இன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கில் 27.03.2024 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரையில் ஆக்கிரமிப்புகளை அளவீடு செய்து ஆக்கிரமிப்பு இருப்பின் உரிய துறை மூலம் தமிழ்நாடு ஆக்கிரமிப்புகள் சட்டம் 1905 இன் கீழ் 7 ஆம் அறிவிப்பு வழங்கி அகற்றப்படும் என தெரிவித்ததன் அடிப்படையில் மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது.

மேலும் அக்கரைப்பட்டி கிராமம் புல எண் 353/7ல் ரயத்து புஞ்சை விஸ்தீரணம் 0.44.ஏர்ஸ் தீர்வை ரூ.0.69 நிலமானது பட்டாஎண் 1605 அருள் என்பவர் பெயரில் பட்டா நிலமாக உள்ளது. மேற்படி புலத்தில் பூஸ்திதியில் உள்ள பாதையில் கற்கள் கொட்டப்பட்டுள்ளதும் பாதையின் ஓரமாக மரங்கள் வைத்துள்ளதும் அகற்றக் கோரி திரு.ராஜமாணிக்கம் மற்றும் திரு.சுரேஷ் ஆகியோர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு W.P.No.21009/2024 நிலுவையில் உள்ளது.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



இதன் காரணமாக மேற்படி கிராமத்தில் நீர்வழிப்பாதை ஆக்கிரமிப்பு மற்றும் பாதை ஆக்கிரமிப்பு என அவ்வப்போது சட்டம்-ஒழுங்கைப் பாதிக்கும் நிகழ்வுகளும் நடந்து வந்துள்ளன.மேலும் இரு தரப்பும் மாறிமாறி வருவாய்த் துறைக்கும்,காவல்துறைக்கும் கோரிக்கை மனுக்கள் அளித்து வருகின்றனர்.

எனவே, இரு தரப்பையும் அழைத்துப்பேசி ஒருமித்த கருத்து ஏற்படுத்தும் வகையில் பார்வை -7 இன்படி அழைப்பாணை அனுப்பப்பட்டு 17.12.2024 அன்று கூட்டம் நடத்தப்பட்டது. எனினும் ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. மீண்டும் 26.12.2024 அன்று கூட்டப்பட்ட கூட்டத்திற்கு இரு தரப்புமே வராமல் புறக்கணித்து விட்டனர். மேலும் இது தொடர்பாக 24.01.2025 அன்று மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்திற்கு பாதை ஆக்கிரமிப்பு அகற்றக் கோரிய திரு. ரவிச்சந்திரன் வகையறா மற்றும் நீர்வழிப்பாதை ஆக்கிரமிப்பு அகற்றக் கோரிய திரு. இரத்தின பூபதி வகையறா ஆகியோர் மட்டுமே வந்திருந்தனர். பாதை ஆக்கிரமிப்பு செய்துள்ள பட்டாதாரர்கள் மற்றும் நீர்வழிப்பாதை ஆக்கிரமிப்பு செய்துள்ள பட்டாதாரர் ஆகியோர் வரவில்லை என்பதால் உடனடி தீர்வு காண இயலவில்லை. இருப்பினும் மேற்கண்ட மனுதாரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி வாக்குமூலம் பெறப்பட்டது.

1) நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் வட்டம்,தொட்டியப்பட்டிஊராட்சியில் வசிக்கும் ரவிச்சந்திரன் வகையறா ஆகியோரின் வாக்குமூலம்:

*"நாங்கள் இராசிபுரம் வட்டம்,தொட்டியப்பட்டிஊராட்சியில் வாய்க்கால் மற்றும் நடைபாத்தியம் தொடர்பாக இன்று 24.01.2025 வெள்ளிக்கிழமைமாலைசுமார் 5.10 மணிஅளவில் இராசிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் அமைதிபேச்சுவார்த்தையில் நாங்கள் கலந்துகொண்டோம். தொட்டியப்பட்டிசுச்சன்காடுமற்றும் அடிகரைசெல்லும் மயானபாதையில் உள்ளஆக்கிரமிப்பைஅகற்றவேண்டும் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் வாய்க்காலில் நீர் செல்வதற்குஎங்களுக்குஎந்தவிதமானஆட்சேபணையும் இல்லையென இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்"* என வாக்குமூலம் அளித்துஉள்ளனர்.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



2) இராசிபுரம் வட்டம் நாமக்கல் மாவட்டம் தொட்டியப்பட்டிஊராட்சியில் வசிக்கும் தொட்டியப்பட்டிஊராட்சியில் வசிக்கும் N.இரத்தினபூபதிS/Oநல்லையகவுண்டர் வகையறாமற்றும் நீர்பாசனவிவசாயிகள் அளித்தவாக்குமூலம்

*24.01.2025 அன்று வட்டாட்சியர் அழைப்பாணையைஏற்று கூட்டத்தில் கலந்துகொண்டுபேசியபிறகுஎங்கள் தரப்புக்கோரிக்கையானசின்னஏரியில இருந்துவெளியேபாசனத்திற்குவரும் வாய்க்காலில் உள்ளஆக்கிரமிப்பை 30.01.2024 அன்றுநாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பிறப்பித்த (ந.க.328/2024/அ2) உத்திரவுபடிஎங்களுக்குசெயல்படுத்துமாறுபணிவுடன் கேட்டுகொள்கிறோம்"* என வாக்குமூலம் அளித்துள்ளனர்.

தற்போது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பாதையானது காலம்காலமாக பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாலைகள பட்டியலிலும் வ.எண் 169 மற்றும் 172-ல் மேற்படி சாலைகள் R-212 மற்றும் R- 214 ஆக இடம் பெற்றுள்ளன. மேலும் தற்போது பூஸ்திதியில் செல்லும் வாய்க்காலானது விவசாயத்திற்காக செல்லும் முக்கிய நீர்வழிப்பாதையாக உள்ளது என தெரியவருகிறது..மேலும் தலத்தணிக்கை செய்த வகையிலும் பூஸ்திதி பாதை ஆக்கிரமிப்பினாலும் ,வாய்க்கால் ஆக்கிரமிப்பினாலும் பொதுமக்கள் பாதிப்புக்குள்ளவாது உறுதியாக தெரிய வருகிறது. மேலும் ஆக்கிரமிப்புதாரர்கள் இராசிபுரம் வட்டாட்சியர் அவர்களால் நடத்தப்பட்ட அமைதிப்பேச்சு வார்த்தையில் முழுமையாக கலந்து கொள்ளாமல் புறக்கணித்து ஆக்கிரமிப்பு அகற்ற தடை செய்து வருகின்றனர். மேலும் மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்ற தமிழ்நாடு நிலஆக்கிரமிப்புசட்டம் 1995 ன் படி நடவடிக்கை மேற்கொள்ளும் சூழ்நிலையில் பட்டாதாரர்கள் மாறி மாறி வழக்கு தொடர்ந்து ஆக்கிரமிப்பு அகற்ற இயலாத நிலை உள்ளது. இவ்வாக்கிரமிப்புகளால் கிராமத்தில் அமைதி குலைந்து சட்டம் ஒழுங்கு பாதிக்கும் சூழல் எழுந்துள்ளது.

எனவேஅக்கரைப்பட்டி கிராம புல எண் 212 விஸ். 7.97.0 ஹெக்டேர்ஸ் - சின்னஏரியில் இருந்து வெளியேறும் நீர்வழிப்பாதை ஆக்கிரமிப்பு மற்றும் தொட்டியப்பட்டி ஊர்பகுதியில்



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



இருந்து தச்சன்காடு மற்றும் அடிக்கரை வரை செல்லும் வண்டிப்பாதையில் உள்ள ஆக்கிரமிப்பு, ஆகியவற்றை அகற்ற தமிழ்நாடு நிலஆக்கிரமிப்புசட்டம் 1905 ன் படி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள இயலாது என்பதால் குற்றவிசாரணைமுறைசட்டம் 1973 பத்தாவது அத்தியாயத்தில் பொது ஒழுங்கினங்கள் புதிய BNS சட்டம் பிரிவு 133(1) (அ) ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அவ்வாறே உத்தரவிடப்படுகிறது.

புதிய BNS சட்டம் பிரிவு 133(1)(அ) ன் படி(குற்ற விசாரணை முறைச்சட்டம் 1973 பிரிவு 133 (1) அ) நீர்வழிப்பாதை ஆக்கிரமிப்பு மற்றும் பாதை ஆக்கிரமிப்புஆகியவற்றை இவ்வுத்தரவு கிடைக்கப்பெற்ற மூன்று தினங்களுக்குள் அகற்றவேண்டும் என பட்டாதாரர் திருமதி.செல்வம். க/பெ.ரங்கசாமி,திரு.சுரேஷ் த/பெ ரங்கசாமி, திரு.பெரியசாமி த/பெ முத்துகவுண்டர், திருமதி.திலகவதி க/பெ பெரியசாமி மற்றும் பட்டாதாரர் திரு.அருள் த/பெ பழனிவேல் ஆகியோருக்கு இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவினை செயல்படுத்திட புதிய BNS சட்டம் குற்ற விசாரணை முறைச்சட்டம் 1973 பிரிவு 135 ன் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு சம்மந்தப்பட்டநபர் அல்லது நபர்கள் உத்தரவின்படி வருகை தந்து அதற்கு எதிரான தமது காரணங்களை ஏழு நாட்களுக்குள் காட்டப்படல் வேண்டும். தவறும் பட்சத்தில் புதிய BNS சட்டம் குற்றவிசாரணை முறைச்சட்டம் 1973 பிரிவு 138 ன் கீழ் உத்தரவு உறுதிப்படுத்தப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்படி உத்தரவினை காவல் துணை கண்காணிப்பாளர் இராசிபுரம், வெண்ணந்தூர் காவல் ஆய்வாளர், இராசிபுரம் வட்ட மண்டல துணை வட்டாட்சியர் எண் 1 மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர் செயல்படுத்திடல் வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5th 21009/24

வட்ட செயல்துறை நடுவர்
மற்றும்
வட்டாட்சியர்.

31/1/2025



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



பெறுதல்:

1. திருமதி.செல்வம். க/பெரங்கசாமி
   க.எண்.2/22.அடிக்கரை,தொட்டியப்பட்டி.அஞ்சல்,
   அக்கரைப்பட்டி கிராமம்,
   இராசிபுரம் வட்டம். 8072392920
2. திரு.ப.அருள்த/பெ.பழனிவேல்
   க.எண்.2/27,தச்சனகாடு,தொட்டியபபட்டி அஞ்சல்,
   அக்கரைப்பட்டிகிராமம், இராசிபுரம் வட்டம் 8015691488
3. திரு.பெரியசாமி த/பெ.முத்துசாமி கவுண்டர் .
   க.எண்.2/29, தச்சன்காடு,தொட்டியப்பட்டி அஞ்சல்,
   அக்கரைப்பட்டி கிராமம்,இராசிபுரம் வட்டம்.9487777217
4. திரு.சுரேஷ் த/பெரங்கசாமி
   க.எண்.2/22,அடிக்கரை,தொட்டியப்பட்டி அஞ்சல்,
   அக்கரைப்பட்டி கிராமம்,இராசிபுரம் வட்டம்.9785042310
5. திருமதி.திலகவதி க/பெ பெரியசாமி ,
   க.எண்2/29 தச்சன்காடு ,தொட்டியப்பட்டி அஞ்சல் ,
   அக்கரைப்பட்டி கிராமம்,இராசிபுரம் வட்டம்.9487777217

(1–5) பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

6. காவல் துணை கண்காணிப்பாளர், இராசிபுரம்.
7. காவல் ஆய்வாளர்,வெண்ணந்தூர்.
8. மண்டல துணை வட்டாட்சியர் எண்-1
9. வருவாய் ஆய்வாளர்,வெண்ணந்தூர் குறுவட்டம்.
10. குறுவட்ட நிலஅளவர்,வெண்ணந்தூர்.
11. கிராம நிர்வாகஅலுவலர்,அக்கரைப்பட்டி கிராமம்.

நகல்:

1.வருவாய் கோட்டாட்சியர் நாமக்கல் அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

2.மாவட்ட ஆட்சியர் நாமக்கல் அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



8. Aforementioned proceedings speak for itself. Therefore, it will suffice to say that it is open to the writ petitioners and private respondents to assail the aforementioned order of jurisdictional Tahsildar, if so advised and if so desired. Recording this stated position, we also record the submission of learned counsel for writ petitioners in I WP that it may not be necessary now to advert to Revenue Standing Orders [to be noted, in 29.07.2024 listing of I WP, learned counsel sought time to produce Revenue Standing Order] and this submission is also recorded.

9. Captioned two main WPs are disposed of in the aforesaid manner. There shall be no order as to costs.

**(M.S.,J.)** **(K.G.T.,J.)**
10.02.2025

Index : Yes / No
Neutral Citation : Yes / No
mmi



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



To

1.The District Collector,
Office of District Collector,
Tiruchengode Road,
Namakkal District – 637 003.

2.The Tahsildar,
Office of Tahsildar,
Rasipuram Taluk,
Rasipuram,
Namakkal District – 637 408.

3.The Revenue Divisional Officer,
Namakkal.

4.The Block Development Officer
(Village Panchayat),
Block Development Office,
Vennandur, Namakkal District.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**M.SUNDAR, J.,**
**and**
**K.GOVINDARAJAN THILAKAVADI, J.,**

mmi

**W.P.No.21009 of 2024 &**
**4358 of 2025**

**10.02.2025**



https://www.mhc.tn.gov.in/judis